கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (15.11.2025) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், "உடன்பிறப்பே வா" என்ற தலைப்பில் சட்டமன்றத் தொகுதி வாரியாக கழக நிர்வாகிகளை சந்திக்கும் நிகழ்வில், சேலம் மேற்கு மற்றும் வீரபாண்டி சட்டமன்றத் தொகுதிகளுக்குட்பட்ட கழக நிர்வாகிகளை தனித்தனியாக சந்தித்து பேசினார். அப்போது கழக நிர்வாகிகளுக்கு புத்தகத்தையும் வழங்கினார்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (15.11.2025) சென்னை, கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், தூய்மைப் பணியாளர்களின் குழந்தைகளுக்கு புதிய உயர்கல்வி உதவித்தொகை திட்டத்தின் கீழ், மாணவ, மாணவியர்களுக்கு மடிக்கணினிகளை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில், அமைச்சர்கள் கே.என். நேரு, தா.மோ.அன்பரசன், மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு, டாக்டர் மா. மதிவேந்தன் மற்றும் மேயர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலினின் பிறந்தநாளையொட்டி

கடலூர் கிழக்கு மாவட்டம் முழுவதும் நலத்திட்ட உதவிகள் வழங்கி எழுச்சியுடன் கொண்டாட வேண்டும்!

இளைஞர் அணி கூட்டத்தில் தீர்மானம் - அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் சிறப்புரை!

கடலூர், நவ.16 - கடலூர் கிழக்கு மாவட்ட கழக இளைஞர் அணியின் மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் கூட்டம், 14.11.2025, வெள்ளிக் கிழமை, மாலை 5 மணி அளவில், காட்டுமன்னார் கோயில் எம்.ஆர்.கே கலையரங்கத்தில் நடைபெற்றது.

வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர், கடலூர் கிழக்கு மாவட்ட கழக செயலாளர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைமை தாங்கி சிறப்புரை யாற்றினார்.

கழக இளைஞர் அணி துணை செயலாளர் பிரபு கஜேந்திரன், கழக தேர்தல் பணிக்குழு செயலாளர் இள.புகழேந்தி, கோ.ஐயப்பன் எம்.எல்.ஏ., புதுவை மாநில அமைப்பாளர் சம்பத் எம்.எல்.ஏ., முன்னாள் எம்.எல்ஏ., துரை.கி.சரவணன், மாவட்ட கழக பொருளாளர் எம்.ஆர்.கே.பி.கதிரவன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இக்கூட்டத்தில் கீழ்காணும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

நவம்பர் 27ம் தேதி பிறந்த நாள் காணும் தமிழ் நாடு துணை முதலமைச்சரும், கழக இளைஞரணி செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு கடலூர் கிழக்கு மாவட்ட கழகம் சார்பில், மாநகரம், ஒன்றியம், நகரம், பேரூர் மற்றும் கிளை கழங்கள்தோறும் கழக கொடியேற்றியும், இனிப்புகள் வழங்கியும், நலத்திட்ட உதவிகள் வழங்கியும், பள்ளி மாணவர்களுக்கு கல்வி உபகரணங்கள் வழங்கியும், விளையாட்டு போட்டிகள் நடத்தியும் சிறப்பாக கொண்டாட வேண்டும்.

கடலூர் கிழக்கு மாவட்டக் கழகத்தில் நடைப்பெற்று வரும் வாக்காளர் சிறப்பு தீவிர திருத்தப் பணிகளை அனைத்து கழக நிர்வாகிகளும் தீவிர களப்பணியாற்றி சிறப்பாக செய்திட வேண்டும்.

கடலூர் கிழக்கு மாவட்டத்தில் கிளை, வார்டு, பாக வாரியாக இளைஞரணி நிர்வாகிகள் நியமனம் செய்ய வேண்டும்.

புதியதாக பிரிக்கப்பட்ட ஒருங்கிணைந்த கழக ஒன்றியங்களான கடலூர் பரங்கிப்பேட்டை புவனகிரி ஆகிய ஒன்றியங்களுக்கு ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் நியமனம் செய்ய வேண்டும்.

கடலூர் கிழக்கு மாவட்டத்தில் உள்ள இளைஞர் அணி நிர்வாகிகள் சமூக வலைதள பக்கங்களில் சிறப்பாக செயல்பட வேண்டும். குறிப்பாக பேஸ்புக், எக்ஸ் வலைதளம், இன்ஸ்டாகிராம் பக்கங்களில் தீவிரமாக செயல்படுவது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்ற ப்பட்டடன.

மாவட்ட கழக துணை செயலாளர்கள் அ.ஞானமுத்து, ஆர்.சக்திவேல், ஒன்றிய கழக செயலாளர்கள்:

குறிஞ்சிப்பாடி தெற்கு வி.சிவக்குமார், குறி ஞ்சிப்பாடி வடக்கு ஆர்.நாராயணசாமி,

திருமுட்டம் மேற்கு கே.ஆர்.கோவிந்தராஜ், திருமுட்டம் வடக்கு எஸ்.செந்தில்குமார், கடலூர் கிழக்கு தெ.காசிராஜன், கடலூர் மேற்கு பி.சுப்பிரமணியன், கடலூர் வடக்கு கே.ஆர்.தனஞ்செயன்,

கடலூர் தெற்கு ஆர்.விஜயசுந்தரம், கடலூர் மத்திய கே.மகேஷ் , புவனகிரி கிழக்கு ஏ.எஸ்.மதியழகன், புவனகிரி மேற்கு ஏ.எம்.மதியழகன், புவனகிரி மத்திய வெற்றிவேல் , கீரப்பாளையம் கிழக்கு வி.ஜி.பி.சபாநாயகம், கீரப்பாளையம் மேற்கு டி.திரு மூர்த்தி, கீரப்பாளையம் மத்திய வி.பி.பாலு, கம்மாபுரம் வடக்கு பா.திருமாவளவன், கம்மாபுரம் தெற்கு கே.ஆர்.ராயர், கம்மாபுரம் மத்திய பி.சுந்தரபாண்டியன், பரங்கிப்பேட்டை வடக்கு முத்துபெருமாள், பரங்கிப்பேட்டை தெற்கு ஆர்.கலையரசன், பரங்கிப் பேட்டை மத்திய எம்.மனோகரன்,

குமராட்சி கிழக்கு த.சங்கர்,குமராட்சி மத்திய ஆர்.ராஜேந்திரன், குமராட்சி மேற்கு கே.நடராஜன்,

குமராட்சி தெற்கு ம.சோழன், குமராட்சி வடக்கு வி.கோவிந்தசாமி,

கடலூர் மாநகர செயலாளர்: கே.எஸ்.ராஜா,

கடலூர் பகுதி செயலாளர்கள்: ப.நடராஜன், பா.வெங்கடேஷ், எஸ்.சலீம், மு.இளையராஜா, வடலூர் நகர கழக செயலாளர் த.தமிழ்ச்செல்வன், வடலூர் நகரமன்றத் தலைவர் எஸ்.சிவக்குமார், பொதுக்குழு உறுப்பினர் கே.பி.ஆர்.பாலமுருகன், இரா.தமிழரசன்,

காட்டுமன்னார்கோவில் எஸ்.கணேசமூர்த்தி, குறிஞ்சிப்பாடி கு.வே.ப.ஜெய்சங்கர், திருமுட்டம் பூ.செல்வகுமார், அண்ணாமலை நகர் க.பழனி, சேத்தியதோப்பு ப.மனோகரன், லால்பேட்டை ஜெ.எம்.அன்வர்சதாத்,

மாவட்ட பார்வையாளர்கள் டி.பழனிசாமி,சி.சின்னமணி மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் க.முத்துகுமார், வி.கே.மணிகண்டன், தி.குட்டிமணி ஜெகன், து.பிரபு,ஆர்.தமிழ்ச் செல்வன், மாநகர அமைப்பாளர் அ.ஜெயமணி உள்ளிட்ட மாவட்ட, மாநகர, ஒன்றிய,நகர, பேரூர் கழக நிர்வாகிகள், இளைஞரணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூர் நகராட்சி பகுதியில் உள்ள ஸ்ரீ மீனாட்சி அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில் நடந்த நிகழ்ச்சியில் 191 பள்ளி மாணவ–மாணவிகளுக்கு பொதுப்பணி மற்றும் நெடுஞ்சாலை, சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு விலையில்லா மிதிவண்டிகளை வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சியர் சிவ சௌந்தரவல்லி, திருவண்ணாமலை நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை மாவட்டக் கழக செயலாளர் தேவராஜி எம்.எல்.ஏ, எம்.எல்.ஏ.க்கள் அ.நல்லதம்பி, அ.செ.வில்வநாதன் மாவட்ட ஊராட்சி குழு தலைவர் என் .ஆர் .கே . சூரியகுமார், நகர செயலாளர் ராஜேந்திரன்,மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் செஞ்சியில் நடைபெற்ற தி.மு.க.அவசர செயற்குழுக் கூட்டத்தில் விழுப்புரம் மண்டல பொறுப்பாளரும், உழவர் நலன் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சருமான எம். ஆர். கே. பன்னீர்செல்வம் சிறப்புரை ஆற்றினார். உடன் விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளரும், முன்னாள் அமைச்சருமான செஞ்சி மஸ்தான், எம்.எல்.ஏ., மாவட்ட அவைத் தலைவர் டாக்டர் சேகர், தேர்தல் தொகுதி பார்வையாளர்கள் மயிலம் இள. புகழேந்தி, திண்டிவனம் ஜாபர் அலி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, சேது நாதன், சீத்தாபதி சொக்கலிங்கம்,செந்தமிழ்ச் செல்வன், தலைமை தீர்மான குழு உறுப்பினர் செஞ்சி சிவா, மாவட்ட துணை செயலாளர்கள் ரவிக்குமார், அருணகிரி, அமுதா ரவிக்குமார், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் விஜயகுமார், நெடுஞ்செழியன், சீனி ராஜ், உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளனர்.

வாக்குத் திருட்டு குற்றத்திற்காக

தலைமைத் தேர்தல் ஆணையரை கைது செய்வார்களா?

முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல்கலாமின் உதவியாளர் பொன்ராஜ் கேள்வி!

சென்னை, நவ.16-

"வாக்குத் திருட்டுக் குற்றத்திற்காக தலைமைத் தேர்தல் ஆணையாளர் ஞானேஷ் குமாரை கைது செய்வார்களா?" என்று முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல்கலாம் அவர்களின் உதவியாளர் பொன்ராஜ் கேள்வி எழுப்பியுள்ளார்.

சமூக வலைதளங்களில் முன்னாள் குடியரசு தலைவர் அப்துல் கலாம் அவர்களின் உதவியாளர் பொன்ராஜ் அவர்கள் அளித்த பேட்டி வைரலாகி வருகிறது. அந்த சமூக வலைதளங்களில் வைரலாகி வரும் பொன்ராஜ் அவர்களின் பேட்டி வருமாறு:

ஞானேஷ்குமார் என்று ஒருத்தர் இருக்கிறார். எலக்ஷன் கமிஷ்னர். படித்துதானே வந்திருக்கிறார். எலக்ஷன் கமிஷனராக உட்கார்ந்து இருக்கிறார். ஐ.ஏ.எஸ்.படிப்பை கிளியர் செய்து விட்டு தானே வந்திருக்கிறார். அவர் செய்து கொண்டிருக்கின்ற அயோக்கியத்தனத்தை நீங்கள் பட்டியல் இட முடியுமா?

அந்த அயோக்கியத்தனத்திற்கு யாராவது பதில் சொல்றாங்களா இங்கே? படித்தவர் தானே அவர். டாக்டர் படித்து இருக்கிறார். அவன் குண்டு வெடிக்கிறான், ஓ.கே. தீவிரவாத செயல்களில் ஈடுபடுகிறான். அவனுக்கு மதம் காரணமாக இருக்கிறது, அவனை அரஸ்ட் செய்துவிடுகிறோம் என்று வைத்துக் கொள்ளுங்கள்,

ஞானேஷ்குமாரை எப்போது அரஸ்ட் செய்வீங்க.? ஓட்டு மொத்த இந்தியாவின் வாக்கை திருடுகிறார். அவைர எப்படிங்க அரஸ்ட் செய்வீங்க.? 65 இலட்சம் பேர்களுடைய வாக்கை திருடி இருக்கிறார். ளுஜசு ஐக் கொண்டு, தமிழ்நாட்டில் இப்போது வாக்கை திருடப் போகிறார். எப்படி அரஸ்ட் செய்வீங்க. ஐ.ஏ.எஸ்.ஆக இருக்கிறார். எலக்ஷன் கமிஷனரா இருக்கார். படித்து இருக்கிறார். பி.ஜே.பிக்கு அடிமையா இருகார்? ஒ படித்தவன் எப்படி பி.ஜே.பிக்கு அடிமையாக இருப்பார். இன்டிபெண்டன்ட் எலக்ஷன் கமிஷனில் படித்தவர், ஐ.ஏ.எஸ்.முடித்தவர், இன்றைக்கு ஒரு அடிமை சேவகம் செய்கிறார் என்றால், அவருக்கும் படிப்புக்கும் என்ன சம்பந்தம்?

ஈக்குவள் செய்து பார்ப்போமா. இதனை ஈக்குவள் செய்ய தெரிந்த நாராயண திருப்பதிக்கு எலக்ஷன் கமிஷனை ஈக்குவள் செய்ய தெரியாதா?

நெறியாளர்: ஓட்டும் தீவிரவாதமும் ஒன்றா என்று கேட்கிறார்களே?

பொன்ராஜ்: ஆமாம் ஒன்று தான். மக்களின் அடிப்படை உரிமையான ஓட்டைத் திருடி நாட்டை கைப்பற்றுவது என்பது என்னது? தீவிரவாதம் தானே! தீவிர வாதத்தைவிட கொடுமையான செயல் அது. இது எலக்ஷன் தீவிரவாதம், அரசியல் தீவிர வாதம். அந்த அரசியல் தீவிர வாதத்திற்கு இன்டிபெண்டன்டா செயல்படக் கூடிய எலக்ஷன் கமிஷனர் ஒரு அடிமையாக செயல்படுகிறார் என்றால் எப்படி அதனை ஏத்துக் கொள்வீர்கள். என்ன பதில் சொல்கிறார். சுப்ரீம் கோர்ட்டிற்கு பதில் சொல்கிறாரா? என்ற கேள்விக்காவது பதில் இருக்கிறதா? ஜனநாயக முறைப்படி எழுப்பக் கூடிய எந்தக் கேள்விக்காவது பதில் இருக்கிறதா? சொல்லுங்கள்!

இது தீவிரவாதத்தை விட அதி தீவிரவாதம்.

அவர் படிச்சு இருந்து என்ன பிரயோசனம். படிச்ச வருக்கு அறிவு இருக்கனும், காமன்சென்ஸ் இருக்க வேண்டும். பதவிக்கு ஏற்ற வகையில் செயல்படக் கூடிய தைரியம் இருக்க வேண்டும். உனக்கு அரசியல் சாசனம் இன்டிபெண்டட் உரிமை கொடுத்து இருக்கு. அதனையும் மீறி நீங்கள் அடிமையாக இருக்கிறீர்கள் என்றால், நீ என்ன பதவிக்காக அடிமையாக இருக்கிறாயா? உன் குடும்பத்தில் உள்ள அத்தனை பேரும் ஐ.ஏ.எஸ்.ஆபிசர்ஸ். படித்தவர் அடிமையாக இருக்கிறான் என்றால் நீ படிச்சு என்ன பிரயோஷனம் ?

கேட்பேனா இல்லையா இப்போ. படிப்புக்கும் இதற்கும் என்ன சம்பந்தம் இருக்கிறது.?

குவாலிட்டி, கேரக்டர், தைரியம், வீரம், விவேகம், அரசியல் சாசன சட்ட பதவிக்கேற்ற செயல்படக் கூடிய நீதி வழுவா தன்மை. இவையெல்லாம் ஒருத்தனுக்கு இருக்கனும் என்று நினைத்தால் அவன் முதுகெலும்புள்ள ஒரு மனிதனாக இருப்பான். முதுகெலும்பற்ற வெற்று பிண்டங்களை வைத்துக் கொண்டு அவர்கள் ஆட்சி நடத்திக் கொண்டு இருக்கிறார்கள் அவர்களிடம் என்ன பேசுவது?

இவ்வாறு பொன்ராஜ் அவர்கள் பேசினார்.

அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு அகவிலைப்படி உயர்வு:

தமிழ்நாடு தொடக்கப் பள்ளி ஆசிரியர் மன்றம் பாராட்டு!

மாநில பொதுச் செயலாளர் முனைவர் மன்றம் நா. சண்முகநாதன் அறிக்கை!

புதுக்கோட்டை, நவ.16

அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு அகவிலைப்படியை உயர்த்தி வழங்கிய தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு தமிழ்நாடு தொடக்கப் பள்ளி ஆசிரியர் மன்றத்தின் மாநில பொதுச் செயலாளர் முனைவர் மன்றம் நா.சண்முகநாதன் பாராட்டு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் கூறியுள்ளதாவது:-

மத்திய அரசுக்கு இணையாக மூன்று சதவீத அகவிலைப்படி உயர்வினை ஜூலை 1ஆம் தேதி முதல் வழங்கப்படும் என்ற அறிவிப்பு தமிழ்நாட்டின் 16 லட்சம் அலுவலர்கள், ஆசிரியர்கள், ஓய்வூதியதாரர்கள் வாழ்வில் மிகுந்த மகிழ்ச்சி தரக்கூடிய அறிவிப்பாகும்.

தமிழ்நாட்டின் ஒட்டுமொத்த ஆசிரியர்களுக்காக தன் வாழ் நாளில் பல்வேறு நலத்திட்டங்களை வழங்கிய சொன்னதைச் செய்வோம், செய்வதை சொல்வோம் என்ற முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் பாதையில் வந்த தமிழ்நாட்டின் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆசிரியர் அரசு ஊழியர்களின் அனைத்து கோரிக்கைகளையும் நிறைவேற்றுவார் என்ற பெரும் நம்பிக்கை ஏற்பட்டுள்ளது.

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஒன்றிய அரசு பணியாளர்களுக்கு அகவிலைப்படி உயர்வு அறிவிக்கும் போதெல்லாம் உடனுக்குடன் தமிழக அரசு அகவிலைப்படி உயர்வை அறிவிக்கும் என்று ஏற்கனவே கூறியதைப் போன்று தற்போது 55 சதவீதமாக இருந்த அகவிலைப்படியை 1.7.2025 முதல் 58 சதவீதமாக உயர்த்தி உத்தரவு வெளியிட்ட தமிழக முதல்வருக்கு தமிழ்நாடு தொடக்கப் பள்ளி ஆசிரியர் மன்றத்தின் சார்பில் பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இராணிப்பேட்டை நகராட்சி ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் மாணவ–மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகளை கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் மாவட்ட கழக செயலாளர் ஆர்.காந்தி வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் ஜே.யு.சந்திரகலா, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஆற்காடு சட்டமன்ற உறுப்பினர் ஜே.எல்.ஈஸ்வரப்பன், நகராட்சி தலைவர் சுஜாதா வினோத் நகர செயலாளர் பூங்காவனம், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் எஸ்.விநோத், நகராட்சி உறுப்பினர் ஏர்டெல் குமார், மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.